*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **21 ஜனவரி 2023**

## பத்திரிகை செய்தி

தினமலர் நாளிதழ் மற்றும் ஆதித்யா மேலாண்மை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து நடத்தும் 'பட்டம் வினாடி வினா விருது-2023' நிகழ்ச்சி ஜிப்மர் வளாகத்தில் உள்ள டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் கலையரங்கத்தில் இன்று நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். தினமலர் புதுச்சேரி பதிப்பின் வெளியீட்டாளர் திரு வெங்கட்ராமன், ஆதித்ய வித்யாஷ்ரம் கல்விக் குழுமத்தின் நிறுவனர் திரு ஆனந்தன், தலைவர் திரு அசோக் ஆனந்த் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இருந்து 80க்கும் மேற்பட்ட பள்ளிகளைச் சேர்ந்த 1000 மாணவர்கள் மற்றும் 200 ஆசிரியர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் ஒவ்வொரு நேரத்தையும் வீணாக்காமல் எப்படி வாழ்வது என்று கணக்கிட்டு கணக்கிட்டு முன்னேற வேண்டும். உழைப்பு இல்லாமல் யாராலும் வெற்றி பெற முடியாது. குறுக்கு வழியே இல்லை. நேர்மையாக, மற்றவர்களைவிட சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கடுமையாக உழைக்க வேண்டும்.
- தினமலர் நாளிதழையும் ஆதித்யா கல்வி குடும்பத்தையும் மாணவர்களையும் பாராட்டுகிறேன்.
- மகிழ்ச்சியாக வாழுங்கள். போட்டி பொறாமை வேண்டவே வேண்டாம். யாராலும் முடியாதது என்பது உலகத்தில் எதுவுமே கிடையாது. தன்னம்பிக்கை இருக்க வேண்டும். பிரச்சினைகள் இருந்தால் நண்பர்களோடு, ஆசிரியர்களோடு, பெற்றோர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- சமீபத்தில் பாரத பிரதமர் நரேந்திர மோடி எழுதிய "எக்ஸாம் வாரியர்ஸ்" புத்தகத்தை புதுச்சேரியிலும் தெலுங்கானாவிலும் வெளியிட்டேன் ஒரு போர் வீரரை போல தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். தேர்வைக் கண்டு ஏன் அஞ்சவேண்டும். அதை ஒரு விழாவாக கொண்டாட வேண்டும் என்று கூறுகிறார்
- வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். உழைக்க வேண்டும். நல்ல பழக்க வழக்கங்கள் இருக்க வேண்டும். ஒழுக்கம் இருக்க வேண்டும். மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். பெற்றோரை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- ஆசிரியர்கள் குழந்தைகளை மகிழ்ச்சியாக கையாளுங்கள். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற தீப்பொறி உள்ளுக்குள் இருக்க வேண்டும். ஏனென்றால் நாமெல்லாம் சாமானியர்கள் அல்ல. சாதிக்க பிறந்தவர்கள். நீங்கள் எல்லாம் சாதனையாளர்களாக வரப் போகிறீர்கள். நீங்கள் உங்களை நம்புங்கள் நம்பிக்கையோடு வாழ்வோம் மகிழ்ச்சியாக வாழ்வோம். வாழ்க்கை வாழ்வதற்கே.
- சிலருக்கு படிப்பு வரவில்லை என்றால் அவர்களிடம் வேறு திறமை ஒளிந்திருக்கலாம். விவேகானந்தர் சொல்கிறார் ஒவ்வொருவரும் ஒரு திறமையோடு பிறக்கிறார்கள். ஆனால் என்னுள் இருக்கும் திறமையை நாம் கண்டுபிடித்து சாதனையாளராக வளர வேண்டும். ஒவ்வொரு நாளும் நம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்.